துணை ஆணையாளர்–1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, ஆணையாளர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல்முறைஆணைகள்

முன்னிலை: திரு.இர.ரமேஷ்

செ.மு.ஆணை எண்.அ4/2215/2016 நாள்:30.10.2017

பொருள்: நிர்வாகம் – உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – பணித்தொகுதி–IV – (2013–14 மற்றும் 2014–15) – பணிநியமனம் (நேரடி) தட்டச்சர்கள் பட்டியல் பெறப்பட்டது – பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன் முறைப்படுத்துதல் – ஆணைபிறப்பித்தல்.

பார்வை: 1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.959/PSD-A3/2016, நாள் 03.03.2017.

2. துணைஆணையாளர் – 1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சேப்பாக்கம், சென்னை –5 அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். அ4–2215–2017 நாள்: 15.03.2017.

----------

ஆணை:

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு பார்வை–1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதம் வாயிலாக தட்டச்சர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களுக்கு, பார்வை –2ல் கண்டுள்ள செயல்முறை ஆணைகளில் இத்துறையில் தட்டச்சர்களாக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

பணி நியமனம் வழங்கப்பட்ட நபர்களில், இத்துறையில் பணியில் சேர்ந்து தட்டச்சர்களாகப் பணிபுரிந்துவரும் கீழ்க்காணும் நபர்களுக்கு, தட்டச்சர் பதவியில், அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் பிரகடனப்படுத்தப்படும் தீர்ப்பு முடிவுக்கு உட்பட்டு, நிபந்தனை அடிப்படையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எண். | பெயர் (தி/ள்) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | T.வெற்றிச்சோழன் | 23.03.2017 மு.ப. | 23.03.2017 மு.ப. |
| 2. | A. ஆனந்தலட்சுமி | 24.03.2017 மு.ப. | 24.03.2017 மு.ப. |

பணிவரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவகாலத்தில் வைத்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

தகுதிகாண் பருவகாலத்திற்குள், தொழில் நுட்ப கல்வித்துறையினரால் நடத்தப் பெறும் Certificate Course in Computer on Office Automation பயிற்சியினை முடிக்கவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

துணை ஆணையாளர் – 1

பெறுநர்

சம்பந்தப்பட்ட தட்டச்சர்கள்

நகல்:

1. ஆணையாளர் / இணை ஆணையாளர் அவர்கள் மேஜைக்கு
2. துணை ஆணையாளர் – 1 / துணை ஆணையாளர் – 2 / உதவி ஆணையாளர் –1 / உதவி ஆணையாளர் – 2/ கணக்கு அலுவலர், ஆணையாளர் அலுவலகம்
3. கண்காணிப்பாளர் "ச" மற்றும் "ஏ" பிரிவுகள், ஆணையாளர் அலுவலகம்
4. அ4 இருப்பு கோப்பு